172181

# மாவூத்து வேளர் தீர்த்த மகிமை
# வழிநடைச் சிந்து

C

O23:33.21195 MA
N35
172181

40

1040

உ

காளீஸ்பரி துணை.

# மாவூத்து வேலர் தீர்த்த மகிமை

# வழிநடைச் சிந்து



இஃது

மதுரை திண்டுக்கல் ரோட் ஜடாமுனி கோவில் சந்திலிருக்கும்

**சி. வீரண பண்டாரம்**

அவர்கள் இயற்றியதை

கண்டப்பநாயக்கனூர் கதிர்வேல்சாமி பாண்டியர்

அவர்களின் பொருளுதவியால்

மஞ்சிநாயக்கன்பட்டி பலசரக்கு கடை வியாபாரம்

செல்லச்சாமி பண்டாரம் அவர்களால்

...கா பிரஸில் பதிப்பிக்கப் பெற்றது.

1935 [விலை அணா 2

Q23:38 2145MT
N35
172|81

அன்னமே தேங்காய் பழமது கொண் டு
அம்பாள் பத்ரகாளி தெரிசனம் கண் டு
இன்னமும் எங்களை ரச்சிப்பா யென் று
என்று பணிந்து நாம் சென்றுமே வேலன்வாழ் (மா)

3. காளி கோவிலுக்கு கன்னி மூலைதன்னில்
கல்லுக்கட்டு கிணற் பாரு ஏந்தன்
காரிளையே வண்டிபாதைதனில் வேம்பு
காதலியே என்ன சிரு முன்னோர்
ஊளிதலமரை காளிகாகம் சென்றிடு மிப்பாதைநேரு என
துத்தமியே இந்த அரமனைபாதை
நடந்திடுவோம் வெகு சோரு பெண்ணே
தெக்கே திரும்படி தேன்மொழி யாளே
தெரியும் காளிமுத்து தோட்ட முன்னாலே
பக்குவமாய் காட்டுபாதையின் மேலே
பாங்காய் நடந்துமே ஓங்கியே வேலன்வாழ் (மா)

4. கட்டிக் கரும்பேகேள் செட்டிகுளமென்று
காணுது முன்னாலோர் குளமே இந்த
காடுகளில் மேயும் ஆடுமாடுகளும்
களைதீர்ந்திடும் தண்ணீர் நலமே இனி
அட்டியில்லாமலே எட்டி நடந்து வா
கிட்டவே பங்கலக் குளமே என
தருமையுள்ள பெண்ணே பெருமாள்கோவி லோடை
ஆயிளையே வெகு வளமே இந்த
ஓடைதனிற் ஜலம் ஓடிவா பெண் ணே
ஒண்டொடியே யதிவேகமாய்த் தா னே
பேடையே கன்னிமார் வேம்பிது முன் னே
பேசுங்குயிலாளே நேசமாய் வேலன் வாழ் (மா)

5. சேயிளையே இது தெப்பம்பட்டி என்று
செப்புவா ரொப்ப இவ்வூ ரே இங்கு
திரும்பும் வழியிலரண்மனையார் தொரு
சேரமிக அமைத்தா ரே அடி
ஆயிளையே என்னைவிட்டு அகலாதே
ஆனால் இவ்வூபுறம் பா ரே நல்ல
ஆதியில் ஜமீன் நாயக்கரமைத்திட்ட
ஆவினங்கள் மேகொரு ஜோ ரே எங்கும்
தீரா விவகாரம் தீர்த்திடும் தீரன்
ஜெயம்பெறும் ராசக் கம்பளவீரன்

17281



பாரில் பொம்மி நாயக்கரென்னும் குபேரன்—அவர்
பாங்கான மாடியை பார்த்துமே வேலன்வாழ் (மாவூ)

தீரன் பொம்மி நாயக்கர் கட்டியமாடியின்
சிறப்பைச் சொல்லுவேன் பா ரே நல்ல
சித்திரை தீர்த்தம் வருகுங் காவடிக்கி
தீப தூபங் கொடுப் பா ரே அடி
ஆரணங்கே ஆயனூரார் களைதீர
அன்பாய்நீர் மோர் கொடுப் பா ரே மிக
அன்னதானங்களும் உன்னிதமாகவே
இன்னிலத்தி லளிப் பா ரே இதோ
ஆனால் ஜனக்கூட்டம் அங்கேநீ பா ரு
அரமனை முன்னால் தெரியுது நே ரு
கான மயிலாளே கடைகளைப் பா ரு
கதிர்வேல் பாண்டியர் அரசாக்ஷி சீரு (மாவூ)

அரமனை சிங்காரம் சொல்லுவேன் கேளடி
ஆரணங்கே வெகு சோக் கு இது
ஆதியில் ராஷாராஜாக்களு மிவ்விதம்
அமைத்தல்ல யிது நோக் கு நல்ல
பரமன் கயிலை தனக்கு நிகரென
பார்த் துரைத்தே ஒரு வாக் கு இதை
பார்க்க அரமனை சுற்றி திருமதில்
பாரிலாகாயத்தை தாக் கு இங்கு
நெட்டு நெட்டாய் வர்ணகால்கள் நிருத் தி
நேர்மையான உத்ரம் மேலே பொருத் தி
திட்டமதாய் துலாக்கட்டை பரத் தி
தீரமுடன் மலைதன்னிலே வேலன்வாழ் (மாவூ)

8. அஷ்டகோணமது எட்டுப்பட்டத் தாலே
இஷ்டம்போல் குமுடம் மே லே அதில்
ஆர்சு வளவுகட்டாரிக் கொடியும்
ஆனதோர் சித்திர வே லே இனி
பஸ்டாகப் போதியல் பார்த்தோர் மயங்கிட
பாலீசது தங்கத்தா லே எங்கும்
பத்தி பத்தியாய் அமைந்திருக்கும் புரு
மாடம் பளிங்கியின் வே லே இதில்
எங்கும் பதுமை அமைத்திட்ட நேர்த் தி
என்னால் முடியுமோ சொல்லிட பூர்த் தி
தங்கக் கலஷம் வைத்தாரோ சுத் தி
தையலே பாரடி உய்யவே வேலன் வாழ் (மாவூ)

அரிவையரே உந்தன் சாடை நீயும்
அட்டிசெய்யாதே உன்மெட்டி சிலம்போசை
அசைந்திடுதன் துயி லாடை இங்கே
தாகத்துக்கு நீர் மோர் சாப்பிடலா மே
தங்கமே உக்கார தாப்பிடமா மே
பாகமாய் தாம்பூலம் பருகியே நா மே
பச்சமுள்ள பெண்ணே இச்சணம் வேலன்வாழ் (மாவூ)

16. ஆதியில் தாயின் தர்மத்துக்குப் பதில்
அய்யாக்காளே தர்மம் பாரே அங்கே
அன்றுகளைத்து வந்தோர்களுக்கு நீர்மோர்
பாணக்கமும் கொடுப்பா ரே நல்ல
நீதியாய் வேம்புகள் பாதை தனில் நிழல்
நேர்த்திய தாகவே சேரே இந்த
நீனிலத் திலுள்ள வண்டிகளு மிதோ
நெருக்கமாய் செல்லுது தேரே சென்று
கடைகளை கண்ணாலே பாரடி பெண் ணே
காளைராம சாமி மூப்பருமுன் னே
அடைவுடன் கட்டிய தர்மமிது கண் ணே
அன்புடன் செல்லுவோம் இன்பமாய் வேலன்வாழ் (மா)

17. வள்ளிக்கொடி யிடையாலே தருமத்தின்
முன்னே போடுவார் வாய்ப்பூட் டு இங்கு
வந்த காவடிகள் தன்னை நிருத்தியே
வணங்குவார் நல்வாம் கே ட்டு! பார்
துள்ளிதமானதோர் காவடிகளிங்கு
சொல்ல முடியாது பாட்டு இப்போ
தூசிபரக்குதே நேசியே இப்போது
துரிதமாய் உன்னுட ரேட்டு நாமும்
அய்யம்மால்குளம் அடுத்தோமே கிட்டி
அன்னமே பாப்பானோடையும் எட்டி
தையலே பூசாரிகுளத்தையும் சுற்றி
தானடந்து செல்வோம்மானே கேள் வேலன்வாழ் (மாவூ)

18. அரிவையரே யிதோ தெரியுது பாரடி
பெரியதளி என்று முன்னே இனி
அப்பால் நடந்துவா செப்புகிறேன் பழனி
மூப்பர் தர்மமிது தானே இங்கே
தெரிந்து கொள்லம் போதிருயன் கோவிலென்று
செப்பினர் மேலோர்கள் மா னே இந்த
தேடிப் பணிகுவார் தானே இங்கே



172181

கார்குளமே மரம் தன்னை நீ பாரு
கருக்கு வாச்சிமா மென்றுநீ தேரு
வேர்க்குதே உன்முகம் வேர்வையு பாரு
வேகமுடன் சென்று தோகையே வேலன் வாழ் (மாவூ)

19. அம்புலியோர்களும் சம்பா புளி என்று
அரைந்திடுவாரிதை குயிலே வெகு
ஆனந்தமாய் சில பாலர்களும் கும்மி
அடிப்பதும் வெகு ஒயிலே நல்ல
வம்புசெய்யாதே கேளிந்த இடந்தனில்
வண்டி ஒன்றுக்குத்தான் மயிலே சுங்கம்
வாங்குரார் பாரடிபாங்கியே வண்டி
வரவரக் காசுதான் கையிலே பெண்ணே
கூட்டம் நெருங்குது கோதையே பாரு
கொப்பு சிமிக்கிகள் மேலேஉஜா ரு
வாட்டமில்லாமலே வந்து நீ சேரு
வள்ளலே செல்லுவோம் உல்லாசமாய் வேலன் (மாவூ)

20. வஞ்சியரே மரம் மஞ்சக்கடம்பிது
வழியில் நிர்ப்பது சீறு இந்த
வானமளாவிய மாஞ்சோலையின்வளம்
வள்ளலே நீ இதோ பாறு இங்கே
துஞ்சும் எளணிகள் மிஞ்சியே விர்க்கிறார்
தோகையே நீ சென்று கேறு ஒரு
துட்டுக்கோரெழனி வெட்டிக் கொடுப்பாரே
துரிதமுடன் பசி யாறு நல்ல
அத்திமரத்தின் முன் காவடி பாரே
அருளிரங்கியே ஆடிச்செல்வா ரே
சித்தன்கருப்பணசாமி முன்னே ரே
சென்றிடுங் காவடிஇன்று நாம் வேலன்வாழ் (மாவூ)

21. எட்டி நடந்து வாகித்டக் கருப்பண
சுவாமி கோவிலிதோ பா ரு இங்கு
ஏகமாய் ஆடுகிடாய் வெட்டும் பாவனை
ஏந்திளையே என்ன ஜோ ரு வெகு
திட்டமுடனரு ளாடிகள் நின்றுபேய்
விரட்டுகிறு ரென்ன சீரு நல்ல
தீரமாய் மங்கை தலைவிரித் தாடுர
கோரத்தையும கண்ணால் பாரு இங்கே
விந்தையுடன் தேங்காய் வேனதைக் கொண் டு
விட்டெரிந்தார் காய்ச்சி தரிடக்கண் டு

சந்தோஷமாய் ஜனம்தா னெடுத்தின் றா
சங்கையுள்ள பெண்ணே யிங்கிர்தவேலன் வாழ் (மாவூ)

22. சாமி கருப்பணன் கோவிலின் முன்பாக
தையலே சாம்ருனி வாடை நல்ல
சங்கையுள்ள தெய்வம் தானிருக்கும்
மூலஸ்தாண முமறப்பு மேடை இந்த
பூமியிலுள்ளோர்கள் போற்றப் பணிந்திடும்
புஸ்பங்களும் முக வாடை கிள்
புரக்கடை யோர்களென்றாலும் பணிந்திடும்
புனல் பருகுமிந்த ஓ டை இங்கே
பொட்டி பொட்டியாய் பழமது கொண் டு
பூவையே ஆகாயம் போடுறார்நின் று
திட்டமாய் கும்மி அடிப்பதும் உண் டு
தீராவினைகளை தீர்த்திடும் வேலன் வாழ் (மாவூ)

23. காவடி கொண்டு வருவோர் கருப்பண
சாமி பாதமதைத் தே டி இங்கு
கண்டுயெல்லோரும் பணிந்திடுவார் நல்ல
காளையே எந்தன் சே டி மிக
ஆவலாய் காவடி ஆடிவருகு து
அன்னமேபார் கண்ணால் கோ டி அவர்
கண்புடையோர்கள் புஸ்பாரங்கள் வாங்கியே
ஆசையாய் போடுவார் தே டி நல்ல
தேங்காய் பழக்கடை தேனே நீ பாரு
தெரியும் புஸ்பக் கடை வரிசையாய் நேரு
பாங்காய் மிட்டாய்க்கடைதன்னை நீ கோரு
பத்தினியே இந்த சித்தமகிழ் வேலன் (மாவூ)

24. மங்கையே கர்ப்பூரம் தேங்காய்பழம் புஷ்பம்
மாதே நீ தாம்பூலம் வாங்கி வெகு
மார்க்கமுடன் சித்தார்பட்டியார் கட்டிய
சாவடி தன்னையும் ஓங்கி நல்ல
செங்கை வளையலணிந்தவளே நீயும்
சென்றுவருவாய் நீ பாங்கி இப்ப
சென்று பிறார்த்தனைக்காரர்களும் தலை
மொட்டையடிக்கிறார் ஓங்கி இன்னும்
ஆண்டிபரதேசிக்கிங்கே நீ பாரு
அன்னதானங்கள் கொடுத்திடும் சீரு
வேண்டும் சமையல் செய்கிறார் நேரு
வேகமாய் செல்லுவோம் பாகமாய் வேலன்வாழ் (மாவூ)



25. காணமயிலே அரமனைச் சாவ டி
கண்டுகொள்வாய் மலையேத்த ம் இந்த
காரணமாமரச் சோலை நிழல் தண்ணி ல்
களை தீர்ந்திடுவாய் எதார்த்த ம் நல்ல
மோனம் மவுனம் சிறந்த குழைந்தவே ல்
சாமி குகைக்கிமேலேத்த ம் இந்த
மொடக்குத் திரும்பும் இடத்தில் கதிர்வேல்
சாமி குகைக்கிமேல் தீர்த்த ம் பெண்ணே
அங்கே பார் கண்ணிமார் அன்னமே தேனே
அனேகம் பேருண்டியல் போடுரார் மானே
இங்கேமலைவளம் சொல்லிட நானே
இச்சனம் செல்லுவோம் பச்சமாய் வேலன் வாழ் (மாவூ)

26. சன்னதி முன்னாலே பதினார்கால் மண்டப ம்
தையலே காட்டிடவென் று இன்னும்
சங்கையுள்ள இந்த சிங்கம் கதிர்வே ல்
பாண்டியரும் எண்ணங் கொண் டு நல்ல
நன்னயமாய் சிப்பிசாஸ்திரியை இந் த
நாட்டில் அழைத்து வந்தின் று மிக
நளமுடனே மயில் மண்டபந்தா ன
தமைத்திடு வாரெண்பதுண் டு
பாண்டியரெண்ணம் முடிந்திடும் மாதே
பாரினில் வேலன் வரமுந்தப்பாதே
வேண்டி மகிழ்ந்துமே சொன்னேனிப்போதே
வேகமுடன் வாராய் தோகையே வேலன் வாழ் (மாவூ)

27. மாவும்பிலாவும் கொய்யாவுடனே நல்ல
மந்தாரை பிச்சியும் தா ளை நல்ல
மாதளையாரஞ்சி முந்திரியும் நெல்லி
மடல்விரிந்திடும் செவ்வா ளை இந்த
காவினில் கூவுதே கானமயில்களும்
காடைகளு மிந்த வே ளை எந்தன்
கண்ணியே காகம்குயிலிசை பாடுதே
காதலுடன் செய்ய வீணை பார்
இங்குள்ள மயில்கள் யேகமாய் கூவும்
இன்னமும் மந்திகள் யெங்கினும் தாவும்
மங்கையே பச்சைக்கிளிகளு லாவு ம்
மார்க்கமுள்ள பெண்ணே தீர்க்கமுடன் வேலன் (மாவூ)

28. வின்னலாகிய மருதமரங்களும்
வேனதுண்டு நோங்கு தேக்கு இன்னம்

வில்லுவேன் சந்தனம் தேவதார் சண்பகம்
வெள்ளை நாங்கிலிது சோக்கு பார்
நன்னயமானதோர் நாரத்தையும் வன்னி
நாவல் மரங்களும் பாக்கு எந்தன்
நங்கையரே இந்த குங்கிலியமரம்
காட்டிலில்லை இதை நோக்கு மலை
சிங்கம் கரடிகள் சேர்ந்துமே நாளும்
சிறுத்தை புலிகளும் கூடியே வாழும்
பங்கம் செய்யும் பன்றி பாதையில் சூளும்
பார்த்துவா யிப்போது நேர்த்தியாய் வேலன் வாழ் (மா)

29. மங்கையே இந்த மருதமரத்தினில்
மங்காது பார் ஓர் விசே ஷம் இந்த
மரத்தின் வேர்தன்னி லிருந்துமே தீர்த்தம்
விழுகுதுபார் பிர காசம் திசை
எங்கினுமுள்ளோர்கள் தீர்த்தங்களாடியே
ஏகமாய் செல்லுவார் நேசம் என
துத்தமியே மலைசார்பினில் பளியர்
யெங்கும் செய்வார் புன வாசம் வரும்
அரமனையா ரிங்கமர்ந்திடும் மேடை
ஆனல் பரிமளம் தெண்டலும் வாடை
கார்குழலே கேள் நீ உன்துயி லாடை
கட்டுலையாமலே எட்டி நடந்துவா (மாவூ)

30. கொஞ்சுங்கிளி மொழிரஞ்சிதமேமலை
தன்னிலே சித்தர்கள் வா சம் இங்கு
கோரக் கரும்புலிப்பாணி யுடனிங்கு
கொங்கணருமிகு வா சம் நல்ல
வஞ்சமிலா ரோமர்வால் மீகருடனே
வல்லத போதனர் நே சம் பார்

வனிதமுடன் முனியீஸ்பரரும் அந்த
கும்பமுனிபிர கா சம் இங்கு
பதினெண் சித்தர்கள் செய்திடும் யோக ம்
பார்க்கமுடியாதி வருட யா கம்
மதிப்பா என்பின் வருவாய் நீ வே கம்
மஞ்சள்வாடை வீசும் வஞ்சியரே இந்த (மாவூ)

31. மங்கையரே மலைச்சார்பினில் வேடர்க ள்
மார்க்கமதாய் ஓன்று டி அங்கே
மானை துரத்திட கானில் வருகு தே
மாதரசே யிங்கு ஓ டி இந்த



சங்கையுள்ளமானை எங்கினும் காணும ல்
தான் வாரார் வேடர்கள் தே டி நாம்
சல்தியாப் தீர்த்தங்களாடிடச் செல்லுவோ ம்
தங்கமே என் பின்னால் வா டி நல்ல
செடியே தீர்த்தங்களாடினோம் பெண்ணே
சேர்ந்த மடப்பள்ளி விநயகர் முன்னே
சோடியாய் சுத்து பிரகாரந் தன்னை
சுத்தி வந்தோமிதோ நித்தம்புகள் வேலன் (மாவூ)

32. அன்னமே சங்கு சேகண்டியின் ஓசைக ள்
அண்டமுகடுடைபட வே வேலன்
ஆலயத்தில் மேலவாத்தியத்தின் தொ னி
ஆதிசேடன் செவிபட வே இன்னும்
நன்னயமாகவே சின்னங்கள் தாரையு ம்
நாலுதிக்கு மதரிட வே எந்த
நாளும் தேவமாதர் வேவியே வந்திங் கு
நடனங்களுமாடிட வே
எங்கும் கர்ப்பூரம் சாம்பிராணி வாடை
ஏகமாய் தீர்த்தம் இளந்தெண்டல் வாடை
செங்கை வளையலணிந்திடும் பேடை
சென்று வாயிப்போது இன்றுநாம் வேலன்வாழ் (மாவூ)

33. வால வயதுள்ள சோலைக்கிளி யாலே
வந்துவிட்டோம் கோயில் தானே நாம்
வாங்கிய தேங்காய் பழத்தையும் வைத்துக்
கர்ப்பூரம் கொளுத்துவாய் தேனே இந்த
வேலவர்பாதம் வணங்கிக் கொண்டோம் நாமும்
வேருவினை யில்லை தானே இனி
வேகமா மஞ்சிநகர் தனக்கேகுவோம்
விரசா நடந்துவா மானே எந்தன்
பத்தரைமாற்று பசும் பொன்னே வாடி
பனிந்தோம் வேலனைபாக்கியம் கோடி
சித்தம்மகிழ்ந்து தருவாரே தேடி
சிற்றிடை பெண்ணாலே பெற்றிடலாம் வேலன் (மாவூ)

34. நன்னயமானதோர் கன்னடியர் குலம்
நற்கீரர் வம்மிஷம் தானே அந்த
நஞ்சுண்டோ னருளால் மஞ்சி நகர்தனில்
நாலுமுன்னாள் பிறந் தேனே எங்கும்
பன்னவர் போற்றும் மதுரை நகரெனும்
பாரில் வாசம் செய்வேன் நானே நிதம்

பாவலர் போற்றிடும் மாவூத்து வேலன்
வழிநடை சிந்து சொன்னே    னே    பாரில்
வேலன்வழி நடைச்சிந்து சொன்னே    னே
வேண்டி மகிழ்ந்துமே சின்னையா நா    னே
காலதாமதம் நீ செய்யா மல்செய்யாமல்தானே
கருணைபுரிந்திடுவாய் வள்ளி லோலனே    (மாவூ)

35. கதிர்வேல் பாண்டியர் கைவிட்டு போனதோர்
கண்டமனூர் சேர்ந்த பூ    மி    இப்ப
காத்திடும் வேலன் கிருபையாலிப்போது
கைவசம் வந்திடும் பூ    மி    இன்று
மதித்திடுவாய் என்சொல் மாருதொருக் காலும்
மன்னர் பாண்டியர்க்கு பூ    மி    நல்ல
மறுமலர் வாடையனிந்திடும் பாண்டியர்
மகிழ்ச்சி படைவாரிப்பூ    மி
தேவர் முனிவர்கள் யாவரும் வா    ழி
தெரிசித்தேன் மாவூத்து வேலனும் வா    ழி
ஆவலாய் சிந்துபடித் தோர்கள் வாழி
அன்பன் சின்னையாவும் இன்பமாய் வாழி    (மாவூ)

சிந்தை மகிழ்ந்திருவர் சேர்ந்து வந்தோம் மாவூத்து
வேலனைப் பணிந்திடவே வினைகளெல்லாம் தீர்ந்து
கொண்டோம்.

முற்றிற்று.

---

உ

குப்புசாமி சேகரமென்னும்

**பால சோதிடன்.**

இப்புஸ்தகத்தினால் வேறொருவ ருதவியின்றி தானே சோதிடம் கற்றுக்கொள்ளலாம். சோதிட முணர்ந்தவர்களுக்கும் ஞாபகக் குறிப்பாகவும் வைத்துக்கொள்ளலாம். விலை அணு 6.

எம். பாலுசாமி நாயுடு,
சடாமுனி கோவில்,
திண்டுக்கல் ரோட்,
மதுரை.

விவேகாநந்தா பிரஸ், தளவாய் அக்கிரஹாரம் மதுரை:—35.

172181